


ஆலந்தூர் பல்லாவரம் தாம்பரம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்ட 60E குன்றத்தூர் பிராட்வே, 52G கவுல்பஜார் கோயம்பேடு மற்றும் சிற்றுந்து பேருந்துகள் S80 அனகாபுத்தூர் தென்றல் நகர் தாம்பரம் மெப்ஸ், S166 போரூர் மணிமேடு ஆகிய வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் கழகப் பொருளாளர் டி. ஆர்.பாலு பல்லாவரம் பேருந்து நிலையத்தில் கொடியசைத்து துவக்கி வைத்தனர். அருகில் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, மேயர் வசந்தகுமாரி, மண்டல குழுத்தலைவர்கள் வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை மற்றும் த.ஜெயக்குமார், டி.பாபு, ஏ.வந்தேமாதரம் உள்ளனர்.

### தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள்!

# மாற்றுத்திறனாளிகள் எங்களுக்கு முன்மாதிரிகள்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு

சென்னை, செப்.3-

‘கடின உழைப்புக்கு மாற்றுத்திறனாளிகள்தான் எங்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறார்கள்’ என்று விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கும் உயரிய ஊக்கத் தொகை வழங்க தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கும் விழா பல்வேறு மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுச் சங்கங்கள் சார்பில் நேற்று நடைபெற்றது. சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நடந்த இந்த விழாவில் பங்கேற்ற இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: நான் அமைச்சராக பொறுப்பேற்று 9 மாதங்கள் ஆகின்றன.

இதுவரை மாநில, தேசிய, சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நிறைய நடத்திவிட்டோம். ஆனால், இதுவரை யாரும் பாராட்டியதில்லை. நீங்கள்தான் முதல்முறையாக பாராட்டு விழா எடுத்துள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் நன்றி.

இந்த அரசாணை சாதாரணமானதல்ல. மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளின் வாழ்க்கையை மாற்றக் கூடியது. தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்றால் ரூ.5 லட்சம், வெள்ளி வென்றால் ரூ.3 லட்சம்,



வெண்கலம் வென்றால் ரூ.2 லட்சம் வழங்கப்படும். இளையோர் பிரிவுகளில் தங்கம் வென்றால் ரூ.3 லட்சம், வெள்ளி வென்றால் ரூ.2 லட்சம், வெண்கலம் வென்றால் ரூ.1.5 லட்சம் அளிக்கப்படும்.

இந்த அரசாணை மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு வாழ்க்கையில் முக்கிய மைல் கல். அதுவும் மாற்றுத்திறனாளிகளுக்கான மேம்பாட்டுக்காக பாடுபட்ட, மாற்றுத்திறனாளிகள் என்று பெயர் சூட்டிய கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடும் காலத்தில் அமலுக்கு வந்திருப்பது இன்னும் சிறப்பு. இன்றைய முதல்வரும் மாற்றுத்திறனாளிகள் நலனில் அக்கறை கொண்டவர். அவர்களின் கோரிக்கைகளுக்கு உடனடியாக செவி சாய்க்கும் முதல்வர் நமக்கு கிடைத்துள்ளார். அதுமட்டுமல்ல அவர்களின் விருப்பங்களையும் நிறைவேற்றும் திராவிட மாடல் அரசுதான் இது. மாற்றுத்திறனாளி பாப்பாத்தி வேலை கேட்டு தந்த மனுவின் அடிப்படையில் அவருக்கு ஒப்பந்தப் பணி அளிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பாரா போட்டிகளில் சாதித்த பாலசுப்ரமணியன், மனோஜ், கணேசன், வெண்ணிலா, இன்பத்தமிழ் ஆகியோருக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. அப்போது அவர்கள் பதக்கங்களுடன் மீண்டும் உங்களை சந்திப்போம் என்று சொன்னார்கள். அதேபோல் சாதித்து காட்டினார்கள். அதுபோல் நீங்களும் சாதிக்க வேண்டும். 6 பாரா ஸ்போர்ட்ஸ் அகடமி தமிழகத்தில் அமைக்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. அதில் முதல் அகடமி சென்னைநேரு விளையாட்டு அரங்க வளாகத்தில் விரைவில் தொடங்கப்படும். சாதாரண நிலையில் இருக்கும் விளையாட்டு வீரர்களே கடுமையாக பயிற்சி செய்ய வேண்டி உள்ள நிலையில், மாற்றுத்திறனாளிகள் பயிற்சி பெறுவது என்பது சாதாரணமானதல்ல.

கடின உழைப்புக்கு நீங்கள்தான் எங்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறீர்கள். இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

நிகழ்ச்சியில் தமிழ் நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ் நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலை. துணை வேந்தர் எம். சுந்தர், தமிழ் நாடு பாராலிம்பிக்ஸ் விளையாட்டு சங்க நிர்வாகிகள் நாகராஜ், கிருபாகரராஜா, விஜயசாரதி, பாராலிம்பிக் வீரர்கள் தங்கவேலு மாரியப்பன், ரஞ்சித்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (02.09.2023) சென்னை, அரும்பாக்கத்தில் உள்ள அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவமனை வளாகத்தில், யோகா மற்றும் இயற்கை மருத்துவ பட்டப்படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியலினை வெளியிட்டார். இந்நிகழ்வில் அண்ணாநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திருமதி.மைதிலி.கே.இராஜேந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலக்குழுத் தலைவர் ஜெயின், தேர்வாணையக்குழுத் தலைவர் மரு.மலர்விழி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இணை இயக்குநர் மரு.பார்த்திபன், சென்னை, யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.மணவாளன் மற்றும் உயரலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர்

# டி.ஆர்.பாலு கோரிக்கையை ஏற்று மருத்துவ நிதி உதவி!

## பிரதமர் அலுவலகம் கடிதம்!

புதுடெல்லி, செப். 3-

திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, சென்னை அயப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த திருமதி பார்வதி, சென்னை படப்பையைச் சேர்ந்த நடராஜன் மற்றும் சென்னை நாவலூரைச் சேர்ந்த பால்ராஜ் ஆகிய மூவரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உதவிடுமாறு முறையே 7.7.2023, 10.7.2023 மற்றும் 16.7.2023 ஆகிய தேதிகளில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குத் தனித் தனியே கடிதங்கள் எழுதியிருந்தார்.

டி.ஆர்.பாலு அவர்களின் பரிந்துரையினையும் வேண்டுகோளினையும் ஏற்ற பிரதமர் அவர்கள், திருமதி பார்வதி அவர்களின் புற்றுநோய் சிகிச்சைக்காக ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரமும் (ரூ.2,50,000/), நடராசன் அவர்களின் சிகிச்சைக்காக ரூபாய் மூன்று லட்சமும் (ரூ.3,00,000/) மற்றும் பால்ராஜ் அவர்களின் சிகிச்சைக்காக ரூபாய் ஒரு லட்சமும் (ரூ.1,00,000/) பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம், டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களுக்கு, 18.7.2023 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரம் வருமாறு:

பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, திருமதி பார்வதி, நடராஜன் மற்றும் பால்ராஜ் ஆகியோரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காக வழங்கப்படும் மொத்த உதவித் தொகையான 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயானது, பயனாளர்கள் சிகிச்சை பெறும் மருத்துவமனைகளான சென்னையில் உள்ள அடையாறு புற்றுநோய் மையம் மற்றும் போரூர் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் என்றும், சிகிச்சை நிறைவு பெற்றவுடன், உரிய ஆவணங்களின் நகலை பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஆவணங்கள் கிடைத்த பின்னர், உதவித் தொகையானது உடனடியாக மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தொழிலதிபர் முரசொலி சிங்காரம் சகோதரர்

# மா.இரவிச்சந்திரன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

நாகை, செப்.3-

நாகை மாவட்டம் வேதாரண்யம் வட்டம் தானிக் கோட்டகம் கிளைக் கழகச் செயலாளரும், தொழிலதிபர் முரசொலி சிங்காரம், மா.சுப்பிரமணியன், மா.இராஜேந்திரன் ஆகியோரின் தம்பியுமான மா.இரவிச்சந்திரன் (வயது 58) உடல்நலக்குறைவால் நேற்று (2.9.2023-



சனிக்கிழமை) இரவு 9 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் மாவட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், கிளைக் கழக செயலாளர்கள் ஏராளமானோர் மறைந்த மா.இரவிச்சந்திரன் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று (3.9.2023- ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் தானிக் கோட்டகத்தில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு நடைபெறுகின்றன.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை! சென்னை கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர்

# பி.வர்ணவேலு (எ) கருணா இல்லத் திருமண வரவேற்பு விழா!

## தயாநிதி மாறன் எம்.பி. - மேயர் பிரியாராஜன் - முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

சென்னை, செப். 3-

சென்னை கிழக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழுதுணைஅமைப்பாளரும் துறைமுகம் மேற்குப் பகுதிக் கழக முன்னோடியுமான பி.வர்ணவேலு (என்ற) கருணா - திருமதி வி.உமாதேவி ஆகியோரின் புதல்வி பி.வி.கலைவாணி - சென்னை சேத்துப்பட்டு - ஜெகந்நாதபுரம் வி.ஜி.விஜயகுமார் - திருமதி வி.சரளாகுமாரி ஆகியோரின் புதல்வர் ஜி.வி.சஞ்சய் (எ) வசந்த் ஆகியோரின் திரு



மணவரவேற்புவிழாஇன்று (3.9.2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில்சென்னை-ஹாரிங்டன் சாலை - வெங்கடாஜலபதி தெரு - எண்.10ல் - சென்னை பச்சையப்பன் கல்லூரி பின்புறம் அமைந்துள்ள - சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடத்தில் நடைபெறுகிறது.

விழாவிற்கு - சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும்-இந்துசமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமை வகிக்கிறார்.

எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன் இசட்.ஆசாத், ஸ்ரீராமலு, எல்.பி.எஃப். மோகன், கே.சரஸ்வரி, ராஜேஷ்ஜெயின், கே.ஆர். அபரஞ்சி, ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, பா.ஜெகதீஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.மாரி, கே.ஆர்.மதன், ஏ.பி.எஸ்.செந்தில், எம்.இருதயராஜ், என்.கோபிகிருஷ்ணன், டி.வினோத் கோத்தாரி, ஆர்.ராம்பிரசாத், எஸ்.வடிவேல், இரா.வேணுகோபால், டி.கே.கலைவாணன், எம்.ராணி, எம்.செல்வி, உள்பட பலரும் வரவேற்கின்றனர்.

தயாநிதிமாறன் எம்.பி., மேயர் பிரியா ராஜன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, எம்.இ.கனி, ஆர். கலைச்செல்வி, வெ.பரிமளம், எல்.நவின், மே.ஜனார்தனன், ஆர்.சுந்தரம், ம.முத்துகுமார், எஸ்.சத்தியாகு, பா.முத்துகுமார், செ.தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், பி.விஜயகுமார், எம்.விநாயகம், எல்.சம்பத்குமார், எல். சாந்திலால்,

துறைமுக தொகுதி வட்டச்செயலாளர்கள்

எம்.ஜெய்சங்கர், பா.கதிவரன், ஆர்.ரவிச்சந்திரன், டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிவரன், எம்.பரத்குமார், கே. கவியரசு, ஆ.நா.பார்த்திபன் உள்பட பலரும் கலந்து கொள்கின்றனர்.



கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் திருவொற்றியூர் மத்திய பகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான மாதாவரம் எஸ்.சுதர்சனம் தலைமை ஏற்று, நலத்திட்ட உதவிகள் வழங்கி தொடங்கி வைத்தார். திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி 2 மண்டல குழு தலைவருமான மணலி ஏ.வி. ஆறுமுகம் ஏற்பாட்டில் நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவில் தலைமை கழக பேச்சாளர் திருமதி சேலம் சுஜாதா, பேச்சாளர் அத்திப்பட்டு சாம்ராஜ் ஆகியோர் சிறப்புரை யாற்றினர். இந்நிகழ்ச்சியில் பகுதி அவைத்தலைவர் வா.முத்துசாமி வரவேற்புரை ஆற்றினார். இவ்விழாவில் திருவெற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளரும் மண்டல குழுத் தலைவர் தி.மு.தனியரசு, திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.மா.அருள்தாசன், இராமசந்திரன் ராஜசேகர் மற்றும் கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

